(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 18.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2023 ஏப்ரல் 26 புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசின் சனாதிபதி அவர்கள்.

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ நஸீர் அஹமட்,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** சுகாதார அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். யூ. எம். அலி சப்ரி,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசனாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்**

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ தவராஜா கலை அரசன்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

**கௌரவ எம். உதயகுமார்**

**கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட**

**கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன**

**கௌரவ அகில எல்லாவல**

**கௌரவ கோவிந்தன் கருணாகரம்**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்**

**கௌரவ பைஸால் காசிம்**

**கௌரவ ஜயந்த கெட்டகொட**

**கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல**

**கௌரவ உதயன கிரிந்திகொட**

**கௌரவ கெவிந்து குமாரதுங்க**

**கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு**

**கௌரவ மனோ கணேசன்**

**கௌரவ உதய கம்மன்பில**

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க

**கௌரவ டீ. வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர**

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஜகத் சமரவிக்ரம**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ சட்டத்தரணி டப்ளியூ. டீ.ஜே. செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

**I**

“2023 ஏப்பிறல் 04 ஆம் திகதி, மத்திய வங்கி சட்டமூலம் தொடர்பிலான உயர்நீதிமன்றத்தின் வழக்குத் தீர்ப்பு பற்றிய அறிவித்தல் என்னால் மேற்கொள்ளப்பட்டது.

நிலையியற் கட்டளை இலக்கம் 55(2)(ஆ) இன் ஏற்பாடுகளுக்கமைவாக, ஒரு சட்டமூலம் தொடர்பான மனு உயர்நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் குறித்த சட்டமூலம் தொடர்பிலான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு பெறப்பட்டதன் பின்னர் உயர்நீதிமன்றத் தீர்ப்பினைச் சபாநாயகர் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க வேண்டும்.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில, கெவிந்து குமாரதுங்க மற்றும் சங்கைக்குரிய அதுரலியே ரதன தேரர் ஆகியோர் மேற்படி அறிவித்தலின் மூலம் உயர் நீதிமன்றத் தீர்ப்பானது சரியான முறையில் தொடர்பாடல் செய்யப்பட்டவில்லையென 2023.04.25 ஆம் திகதி இக்கௌரவ சபையில் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கௌரவ உறுப்பினர்களுக்கு ஏதேனும் சந்தேகம், தெளிவின்மை ஏற்பட்டிருப்பின், அது தொடர்பில் நான் வலியுறுத்த விரும்புவது யாதெனில், மேற்படி அறிவித்தலின் மூலம் உயர் நீதிமன்றத்தினால் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களுக்கு உட்பட்டு மத்திய வங்கி சட்டமூலத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்புடன் முரணானதாக அமையமாட்டாதென உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது என்பதையும், அதற்கமைவாக உயர் நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களுக்கு உட்பட்டு சட்டமூலத்தை சாதாரணப் பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றலாம் என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது என்பதையுமே தொடர்பாடல் செய்ய நான் கருதினேன்.

குறித்த உயர் நீதிமன்றத் தீர்ப்பு சபா பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு, ஹன்சாட் அறிக்கையில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு தற்போது அதனை பாராளுமன்றத்தின் இனையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியுமென்பதையும் மேலும் அறியத்தர விரும்புகின்றேன்."

**II**

"பாராளுமன்ற உறுப்பினர், கௌரவ அஜித் ராஜபக்ஷ அவர்களால் 2023 சனவரி 17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை விடயம் தொடர்பில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துவதற்கான பிரேரணையொன்று கொண்டு வரப்படலாம்."

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் —

(i) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 நவம்பர் 30 ஆம் திகதிய 2308/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(ii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 சனவரி 04 ஆம் திகதிய 2313/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 சனவரி 25 ஆம் திகதிய 2316/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iv) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 பெப்ரவரி 20 ஆம் திகதிய 2320/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(v) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 மார்ச் 04 ஆம் திகதிய 2321/76 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(vi) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 மார்ச் 07 ஆம் திகதிய 2322/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(vii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 மார்ச் 07 ஆம் திகதிய 2322/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(viii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 மார்ச் 17 ஆம் திகதிய 2323/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(ix) 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் நலன்புரி நன்மைகள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 ஏப்ரல் 21 ஆம் திகதிய 2328/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அஷ்வசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து கட்டளைகள் மற்றும் கொடுப்பனவுத் திட்டம் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயமான) 19(அ) ஆம் பிரிவின் கீழ் இறக்குமதிப் பொருட்கள் மீதான சுங்கத் தீர்வை வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 மார்ச் 02 ஆம் திகதிய 2321/50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரங்கள் ச**பாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) கல்வி அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான தேசிய கல்வி ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) சுகாதார அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான ஹோமியோபதி மருத்துவ சபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) கொடகம, ஹோமாகம, பொரளை வீதி, சித்துமின மாவத்தை, இல. 217/2 இல் வதியும் திரு. சந்திரிசிறி வெத்தசிங்கவினது 2022.12.13 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) மாத்தறை, கோட்டகொட, பாத்தேகம வடக்கு, போகஹவத்த எனும் முகவரியில் வதியும் திரு. எஸ்.எஸ். மஹிந்த அபேசேகரவினது 2023.03.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) பண்டாரகம, கெஸ்பேவ வீதி, தலகஹவத்த, இல. 52 இல் வதியும் திரு. வீ.கே.ஏ. அநுரவினது 2023.01.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ விஜித ஹேரத் சமர்ப்பித்தார்.

(2) கெபிதிகொல்லேவ, கோனமெரியாவ எனும் முகவரியில் வதியும் திரு. டப்ளியூ.எம். சாந்த குணதிலகவினது 2023.02.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ றோஹண பண்டார சமர்ப்பித்தார்.

(3) ஹிங்குல, எத்தல பிட்டிய, இல. 62 இல் வதியும் திரு. எல்.ஏ. டப்ளியூ. ஜயதிகலவினது 2023.02.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்க சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30( 10 ) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. சிறப்புரிமை:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ செஹான் சேமசிங்க அவர்கள் 2023 மார்ச் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 118 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின் கீழ் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்:** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2023 ஏப்ரல் 17 ஆம் திகதிய 2328/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நீட்டிக்கப்பட்ட நிதி வசதியின் (EFF) கீழான ஏற்பாட்டினை அமுல்படுத்துவதற்கான தீர்மானம்:** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,—23/0727/604/058-1 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான 2023 ஏப்ரல் 17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், இலங்கைப் பொருளாதார மீட்புக்கான விரைவான நிலைமாற்றத்தினை அடைவதற்காகவும் அதனைத் தொடர்ந்து இலங்கை மக்களுக்கும் எதிர்காலச் சந்ததியினர்களுக்கும் நலன் பயக்கும் நிலைபெறுதகு பொருளாதார வளர்ச்சியை அடைவதற்காகவும் SDR 2.286 பில்லியனுடன் (சுமார் 3.0 பில்லியன் ஐ.அ. டொலர்கள்) இலங்கைக்காக 48 மாத கால நீட்டிக்கப்பட்ட நிதி வசதியொன்றிற்காகச் (EFF ) சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF ) இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதும், 2023 மார்ச் 22 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுமான இந்த ஏற்பாட்டினை அமுல்படுத்துவதற்குத் தேவைப்படுகின்ற சகல அங்கீகாரமும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு வழங்கப்பட வேண்டுமென இப்பாரளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(மு.ப. 11.32 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் தலைமை தாங்குவாராக” என வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 12.26 மணிக்கு கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் தலைமை தாங்கினார்.)

“கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன தலைமை தாங்குவாராக” என வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.54 மணிக்கு கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன தலைமை தாங்கினார்.)

“கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்குவாராக” என நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.06 மணிக்கு கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்கினார்.)

அவ்வேளை நேரம் பி.ப. 5.30 மணிக்கு மேலாகிவிடவே விவாதம் ஒத்திவைக்கப்பட்டது.

விவாதம் அதிலிருந்து 2023 ஏப்ரல் 27 ஆம் திகதி வியாழக்கிழமை மீண்டும் ஆரம்பமாகும்.

**8. நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2021 ):** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.01.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை ( 2021 ) :** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— இலங்கை போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை (2019 ) ,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(2)(c) ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை போக்குவரத்துச் சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2021):** கமத்தொழில் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் 2023.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. நெல் சந்தைப்படுத்தல் சபையின் வருடாந்த அறிக்கை (2016):** கமத்தொழில் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2022.09.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. நெல் சந்தைப்படுத்தல் சபையின் வருடாந்த அறிக்கை (2019):** கமத்தொழில் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,—1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. இலங்கை தேயிலைச் சபையின் வருடாந்த அறிக்கை (2020):** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,—1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 253 ஆம் அத்தியாயத்தின் கீழ் 2022.11.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேயிலைச் சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**14. பனை அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை (2016):** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,—1975 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தென்னை அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் 2022.12.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய பனை அபிவிருத்திச் சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**15. பனை அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை (2017):** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,—1975 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தென்னை அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் 2022.12.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய பனை அபிவிருத்திச் சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**16. தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2020):** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,—1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**17. களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை கம்பெனி லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2019/2020):** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,—1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2022.11.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை கம்பெனி லிமிடட்டின் 2019/2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**18. வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கை (2017):** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,—1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனியின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**19. வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கை (2020):** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,—1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனியின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**20. வரையறுக்கப்பட்ட இலங்கை அணுசக்தி சபையின் வருடாந்த அறிக்கை (2019):** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,—1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2022.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட இலங்கை அணுசக்திச் சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**21. களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்று தலைமைதாங்கும் உறுப்பினரால் 53 (3) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**22. இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்று தலைமைதாங்கும் உறுப்பினரால் 53(3) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் சபைக்குத் தலைமை தாங்கும் உறுப்பினரால் சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**23. ஒத்திவைப்பு:** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

அவ்வேளை, நேரம் பி.ப. 5.30 மணியாகிவிடவே, பி.ப. 6.11 மணிக்கு சபைக்குத் தலைமை தாங்கும் உறுப்பினர் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2023 ஏப்ரல் 04 ஆம் திகதிய சபைத் தீர்மானத்திற்கிணங்க 2023 ஏப்ரல் 27 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.